



யாழ்ப்பாணம், சீனிவாசகம் வீதி, கொட்டடியைப்
பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

# பழனி துரைரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

04.04.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம், சீனிவாசகம் வீதி, கொட்டடியைப்
பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்

# பழனி துரைரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 04.04.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தெய்வக் கருணைத் திருவுளமும்

தீதில்லா

உண்மையுடன் ஆழ்ந்த

உயிரன்பும்

எண்ணப் பெருமைதரும்

பாசமும் பற்றுறுதி

கண்ணியமாகக் கடினமுடன் உழைத்து

பண்புடனே வாழவைத்த தலைவா


எங்கள் உள்ளம் கனிந்துருகச்

சிரந்தாழ்த்தி நாம் படைக்கும்

சமர்ப்பணம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "

தோற்றம்
14 ◊ 07 ◊ 1951

மறைவு
05 ◊ 03 ◊ 2009



அமரர்

# திரு.பழனி துரைரத்தினம்

அவர்கள்

## திதி வெண்பா

சர்வதாரி மாசிமதி நாள்இருபத் தொன்றினிலே
பூர்வபக்க நவமித் திதிதழுவ - துரைரத்தினம்
பூவடி தூக்கி யாடிய கூத்தனின்
சேவடி சேர்ந்த தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடையா யென்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இ.ன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டே லுன்னையென்றும்
மறவாமை வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும்போதுன் அடியின் கீழிருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேய
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்தும் புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"**
**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், சீனிவாசகம் வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த வேலுப்பிள்ளை பழனி மாணிக்கம் தம்பதியரின் அருமைப் புதல்வன்

# அமரர் துரைரத்தினம் அவர்களின் காலடிப் பதிவுகள்

ஏறுமயில் ஏறிமாங் கனியடைய உலகைத்
தானொருவி வலம் வந்து மாங்கனியை அண்ணன்
வீறுகரங் கண்டுமனம் வெதும்பியவன் பழனிக்
குன்றுதனை நாடிச்சிறு துண்டுடுத்த சிறுவன்
அன்றுறைந்த கொட்டடியூர் அந்நியர்கள் ஆளத்
தன்பதியில் சுவரினுள்ளே மூடிச்சிறைப்பட்டோன்
இன்று யாழ் தொல்பொருட் காட்சியகம் உறைந்தும்
தன்னடியார்க் கருள்சுருக்கும் கொட்டடியான் தானே.

எனக் கொட்டடிவாழ் மக்கள் கைவகூப்பித் தினம் வணங்கும் பழனிமுருகன் அடியவர்கள் நிறைந்துவாழும் சீனிவாசகம் வீதியில், வேலுப்பிள்ளை அவர்களின் மைந்தன் பழனி அவர்களுக்கும் மனைவி மாணிக்கம் அவர்களுக்கும் அருமைப் புதல்வனாக, தவத் தனிமகனாகத் துரைரத்தினம் அவர்கள் **14.07.1951**ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோரின் அன்புக்கும் அருமைக்கும் அவர் ஒரு கனிமழலை. அவரது முன்னேற்றத்தில் மிக அக்கறை கொண்டவர்களான பழனி மாணிக்கம் தம்பதி அவர் அரிவரி படிக்கவெனக் கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலையில் விஜயதசமியில் ஏடுதொடக்கிப் புத்தகம், சிலேட்டுடன் தூக்கிச் சுமந்தனர். **10**ஆம் வகுப்புவரை நமசிவாயம் வித்தியாசாலையில் கல்விகற்றுவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைரத்தினம் உழைப்பின்மூலம் ஊதியம்தேட முயன்றார். அவருக்குக் கட்டிட மேசன்வேலை செய்வது பொருத்தமாக அமைந்தது.

வேலை எவ்விடத்தில் அமைந்தபோதும் பணியாற்றி வீடு வந்ததும் வண்ணை வைத்தீசுவரன் தேவஸ்தானம், கொட்டடி ஸ்ரீ மீனாட்சி அம்மன், வில்லூன்றி வீரகத்தி விநாயகர், நல்லூர், முருகன், நயினை நாகபூஷணியம்மன் என மிகவும் பக்தியுடன் தொழுதுவருவார். அவருக்கு இளமை அழகை அள்ளிக்கொடுத்தது. அவருடைய அரும்புமீசையைப் பார்த்துக் களிப்புடன் கண்சிமிட்டிய பெற்றோர் அவருக்கு உகந்து துணையைத் தேடினர்.

மாவிட்டபுரத்தில் வைரமுத்து லீலாவதி குடும்பம் பெரியது; அமைதியானது. அவர்களுக்கு இராசரத்தினம், நாகேஸ்வரி, நாகேஸ்வரன், நவனீதராஜா, நவனீதராணி, சாந்தகுமாரி, மகேந்திரன், மனோன்மணி, வசந்தகுமாரி என ஒன்பது பிள்ளைகள். இவர்களுள் எட்டாவது பெண் மனோன்மணிக்கு உகந்த கணவனாகத் துரைரத்தினம் அமைவதாக சாதகக் குறிப்புக்களின் மூலமும் கண்டனர். கெட்டிமேளம், வேதமந்திர ஆசீர்வாதம், விநாயகன் கடைக்கண் அருள். தம்பதி தம் மணவாழ்விற் பூரித்தனர்.

தலைமகள் துஷிகலா பிறந்தாள். எல்லோரும் மகிழ்ந்தனர். ஆனால் அவள் உதிர்ந்த மலராகப் பெற்றோரும் உற்றோரும் கவலைக்குள் ஆழ்ந்தனர். மூத்த மகனாகத் துஷிகரன் பிறந்து வீமன்காமம் மகாவித்தியாலயம், தெல்லிப்பளையிற் கல்வி கற்றான். தற்பொழுது டோகாவில் பணியாற்றுகின்றான். அடுத்தமகளாக ஏர்விழி நடைபயின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்பொதுத்தராதர சாதாரண (O/L) வரை கல்வி கற்றுள்ளாள்.

இரண்டாவது மகன் துஷ்யந்தன் 10ஆம் ஆண்டு கற்று, தற்போது றஞ்சனாஸ் புடைவைக் கடையிற் பணியாற்று கின்றான். மூன்றாவது மகன் நக்கீரன் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் 8ஆம் ஆண்டு கற்கின்றான். நான்காவது மகன் நந்தீஸ்வரன் தெல்லிப்பளையில் இயங்கும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் 6ஆம் ஆண்டு கற்கின்றான்.

எதிர்காலம் ஒளிவீசத் துடிப்பான நான்கு ஆண்பிள்ளைகளும், ஒரே பெண்ணும் அவர்களின் மடியிற்றான் துள்ளிவிளையாடிய மான்கன்றுகள். துரைரத் தினத்தை அவர்கள் 'அப்பா' எனக் குலவிக் குழுமும்போது துரைரத்தினம் தாமரை இதழ்களின் மத்தியில் ஒளிரும் மகரந்த அல்லி. பிள்ளைகளை வாரியள்ளிப் புல்லியணைக்கும் அன்பான அப்பா.

மைத்துனர், மைத்துனிகளாலும், அவர்வழிவந்த பெறாமக்கள், மருமக்களாலும் புகழ்ந்து பேசி உறவுகொண்டாடி மகிழப்படும் அருமையான உறவினர், அயலவர், ஊரவர்களால் அன்புடன் பழகி உறவாடப்படும் நல்ல நண்பன்; அயலவன்.

நிறைவான வாழ்வும், பிள்ளைகளின் எதிர்கால சுபீட்சமும் நோக்கிய உள்ளத்துடன் துரைரத்தினம் தனது மனைவி மனோன்மணியுடன் என்றும் உண்மையான குதூகலத்துடன் வாழ்ந்தவர். இன்னமும் இளமை அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிலகாத வயது. விதி வலிது என்பர். அது கொடியதும் கூட. மனைவியைத் தேற்ற எவராலும் முடியாது. பிள்ளைகளை ஆற்றத் தாயார் திணறும்போது உற்றார் என் செய்வார்? காலன் கடமையைச் செய்துவிட்டான். சர்வதாரி ஆண்டு மாசித்திங்கள் 21ஆம் நாள் (05.03.2009) வியாழக்கிழமை பூர்வபக்க நவமித் திதியில் அரன் திருவடிக்கீழ் துரைரத்தினம் அமரர் என விதி சமைத்தான். அமரரின் நிலைத்த ஆன்மசாந்திக்குப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் பழனி துரைரத்தினம் அவர்களின் பிரிவாற்றாத அன்புறவுகளின் உளம் நெக்குருகிய கையறும்

## மனைவி மனோன்மணி

குனிந்த தலைநிமிர்த்தக் குலுங்கி நடுங்கியகை
கனிவாக என்நாடி தன்னை உயர்த்திமுகம்
தணிவாக நோக்கியஎம் திருமணநாள் உங்கள் கண்
மணியில் எனைக்கண்டேன் மணியாக வாழவைத்தீர்.

தலைமகள் துஷிகலா தனைப்பிரிந்து துடித்த உங்கள்
நிலையிற் பதறிநான் நினதன்பின் ஆழத்தை
உணர்ந்து துடித்தேன் உங்களுளம் அமைதிபெறத்
தினமும் அன்பாகத் தெய்வங்களை வலம் வந்தோம்!

துஷிகரன் பிறந்தான் துள்ளி உலக்கைபற்றி
வசீகர மாகத்தான் கூரைதனைத் தட்டியதாய்
அறிந்தேன் மகனுச்சி முகர்ந்து மனங்களித்தேன்
தொடர்ந்து ஏர்விழியைத் தூக்கி உங்கள் மடிவைத்தேன்.

துஷ்யந்தன் நக்கீரன் நந்தீஸ் வரன்துள்ளிப்
புஷ்பங்கள் போலுங்கள் மடியிற் புரளுவதை
எப்போதும் கண்டேன் என்தலைவா என்நினைவில்
இப்போதும் நிற்கிறது இதையேன்நீர் உணரவில்லை?

ஐயா அமுத மலையே என்தலைவா!
உய்யவழி தெரியவில்லை ஓடி இங்கே வாருமையா!
பிள்ளைகள் கவலுகின்றார் பேதைநான் துடிக்கின்றேன்
உள்ளம் பதறுதையா உணர்ந்துவந்து சேருமையா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் துஷிகரன்

தூக்கிச் சுமந்து துள்ளியோடப் பின் தொடர்ந்து
ஆக்கம் பெற நல்ல அறிவுரைகள் பயிற்சிதந்து
ஏக்கம் படாமல் இயன்றவரை இனிமைசெய்து
தூக்கத்திலும் நெஞ்சிற் சுமந்தவரே அப்பாவே!

ஏட்டைப் புரட்டிப் படித்து நாம் உயர்ந்திடவே
நாட்டமுடன் உழைத்து உருகிஓடாகியவர்
நாட்டின் நிலைமை வாட்ட வதங்கிவளம்
ஈட்ட முடியாமல் துடித்தீரே எங்கள் அப்பா!

காட்டுத் தர்பார் கலக்கத்தில் வாடாமல்
நாட்டை விட்டோடி நாலுபணம் தேடவென்று
டோகார் நாடடைய எனக்கு வழி காட்டியவர்
நான் காண முடியாமல் ஏகியதேன் அப்பா அப்பா!

அப்பாவைக் குழந்தைபோல் வாழவைக்க எண்ணிய நான்
தப்பென்ன செய்தேன் ஏன் பிரிந்தீர் அப்பாவே?
எப்போ இனிக்காண்பேன் இறைவா ஏன் சோதித்தாய்?
அப்பாவை நான் பார்க்க வேண்டும் என் மடியில் தா!

## மகள் ஏர்விழி

பிள்ளைக் கனியமுதே பொன்மலரே பெண்மகளே
செல்லத் திரவியமே சீர்பெறநீ படியம்மா
நல்லாய்ப் படித்து நல்லவராய்ப் பெண்கள் எல்லாம்
கல்வி அறிவுடனே காசுபணம் தேடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தாலே பெண்கள் உயர்வாக வாழ்ந்திடலாம்
நினைத்துப் படியம்மா நெஞ்சைக் குளிரவைப்பாய்
அனைத்து அறிவுரையும் அன்போ டுரைத்த அப்பா!
நினைத்திப்போ பார்க்கின்றேன் நெஞ்சிரங்கி அழுகின்றேன்.

அன்போடும் ஆசைக் கனிவோடும் பாராட்டி
என்றுமென் வாழ்வு செழிப்படையக் கனவுகண்ட
அன்பான அப்பாவே என்னபிழை செய்தோம் நாம்
இன்பமாய் வாழவைக்க இனியார் எமக்குள்ளார்?

## மகன் துஷியந்தன்

கன்னத்தில் கன்னம் கரும்புச் சுவையாக
இன்பமொழியில் இனிதாக துஸ்யந்தா!
என்றழைக்கும் அப்பா என்காதில் உங்கள்குரல்
நன்றாகக் கேட்கிறது நாற்புறமும் பார்க்கிறனே!

உங்கள் அறிவுரைகள் எல்லாம் சிறப்பாகும்
தங்க மொழியப்பா தவறுசெய்தேன் சிறுவனென
இன்று உணர்கின்றேன் இனிப்போன நாள்திரும்பா
என்றாலும் மெய்வருந்தி உழைப்பேன் வாருங்கள் அப்பா!

## மகன் நக்கீரன், நந்தீஸ்வரன்

நான் தம்பி நந்தியுந்தான் தேடியுங்கள் பின்வருவோம்
ஏன் தொடர்ந்து வருகின்றோம் என்றுணர்ந்து அப்பாவே
அன்போடு விளையாடி ஆசைமுத்தம் அடுக்கிவைத்துக்
கன்னத்தைத் தட்டிக் கனிவாய்க் கையுறை தருவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கவைக்க ஆசைக் கதைகள் பலசொல்லி
அடிக்காமல் அதட்டி அறிவுவழி காட்டிடுவீர்
படிப்பது போல் நடித்தும் சிலவரி நினைவில்வைத்து
படிப்பிற் சிலகுறிப்புப் பயின்றோமே எங்கள் அப்பா!

எங்கள் வழிகாட்டி இனியாரோ நாமறியோம்
சங்கடங்கள் வந்தால் சடாரென் றுடன்வந்து
எங்களைக் காப்பாற்ற ஏற்றவர்கள் யாருள்ளார்
எங்கள் அப்பாவே உடனோடி வாருங்கள்.

## பெறாமக்கள் புலம்பல்

சித்தப்பா வேளங்கள் சிந்தை நிறைந்தவரே
அன்போடு அரவணைத்து அறிவுரைகள் பகர்ந்துமுகம்
இன்பமாய் இருக்கவென இனியவைகள் செய்திடுவீர்
இன்றெமக்கு சித்தப்பா உங்களைப் போல் யாருள்ளார்?

## மருமக்கள் புலம்பல்

புன்னகையும் அன்பும் பொலிய உரையாடி
இன்பம்கனிய என்றும் உறவுவழி
மருமகளே, மருமகளே என அழைத்து மகிழவைக்கும்
மாமா ஏன் எமைவிட்டுப் பிரிந்தீர் அவலமுற்றோம்.

## மைத்துனர், மைத்துனியர் புலம்பல்

எங்கள் பெரிய குடும்பத்தில் இளையவரே
சங்கமங்கள் மங்கலங்கள் அத்தனையும் வந்திருந்து
எந்தவிதமான பணிகள் இருக்குதென்று
அந்தவழி ஆற்றுகின்ற மைத்துனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் ஒளி என்றுமுங்கள் முகம்காட்டும் சேவைகள்
சங்கடங்கள் ஆனாலும் சாதுர்யம் சரிசெய்யும்
பொங்கி முடித்துப் பசியாறும் இன்பநிலை
தங்க மகிழ்வுடனே உறவாடும் மைத்துனரே!

இன்றுங்கள் பிரிவெமக்கு ஏக்கம் தருகிறதே
அன்பான உங்கள் குடும்பம் கலங்குவது
உங்கள் மனைவியாம் எங்கள் சகோதரியும்
தங்கள் குழந்தைகளும் தவிப்பதையாம் பொறுப்போமோ?

## உற்றார் புலம்பல்

உறவோடு உற்றார் உரிமை கொண்டாடி
சிறப்போடு காணும் மங்கலங்கள் வேறுவித
விழாக்கள் அனைத்தினிலும் விரைந்து வந்து பங்கேற்றுப்
பழகும் உறவே உமைப்பிரிந்தால் தாங்குவமோ?

## அயலவர் புலம்பல்

அயலவராய்நாம் அன்புபா ராட்டவில்லை
அயல்தான் உற்றவிடத் துதவும் உறவெனவே
எப்போதும் சந்தித்து இனிதுறவாய் வாழ்ந்திருந்தோம்
இப்போது எமைப்பிரிந்தீர் ஏது செய்வோம் கலங்கிறமே.

## தேற்றம்

காலை மலர்ந்து மாலையிலே செடியுதிர்க்கும்
காலை நனைத்தஅலை காணாமற் போய்விடுமே
ஓடும் முகில்மேகம் நிறைத்து மறைந்திடுமே
நீடுலகில் வாழ்ந்ததெவை நிமலனையே தொழுதிடுவோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னால் முடியுமானால்.......

- உன் சுற்றத்தார் நிதானம் தவறிவிட்டு அப்பழியை உன்மீது சுமத்திட்ட போதிலும் நிலைகுலையாது நிதானமாய் நடந்திட உன்னால் முடியுமானால்.......
- எல்லோரும் உன்னைச் சந்தேகிக்கும்போது அவர்களது சந்தேகத்துக்கு இடமளித்துவிட்டு உன்மீது விசுவாசம் வைக்க உன்னால் முடியுமானால் ...............
- உன்னைப் பற்றிப் பொய்யுரைக்கப்படும்போது நீ பொய்யுரைக் காதிருக்க உன்னால் முடியுமானால் ......
- மற்றோர் உன்னை வெறுக்கும்போது உன் மனதில் வெறுப்புக்கு இடமளிக்காதிருக்க முடியுமானால்........
- அதிகம் நல்லவன்போற் காட்டிக்கொள்ளாமலும் பேரறிஞன் போல் பேசாமலும் இருக்க உன்னால் முடியுமானால்........
- உன்னால் கனவு காணவும், ஆனால் அக்கனவுகளை உன் எஜமானராக்கிடாமலும் இருக்க முடியுமானால்...........
- உன்னாற் சிந்திக்கவும் ஆனால் அந்தச் சிந்தனைகளே இலட்சியமெனக் கொள்ளாமலும் இருக்க முடியுமானால்.......
- சாதாரண சனங்களோடு உறவாடிப் பழகினாலும் உன் நற்குணங் களை இழந்திடாதிருக்க முடியுமானால் .....
- பகைவர்களோ, பாசமிகு நண்பர்களோ உன்னைக் கோபிப்பதற்கு இடமளிக்காதிருக்க முடியுமானால்.....
- எல்லோரையும் மதித்துப் போற்றும் அதே வேளையில், எவரையும் தலையிற் தூக்கி வைத்துக்கொள்ளாதிருக்க உன்னால் முடியு மானால்.....
- பெறுமதிமிக்க ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்மிக்க அறுபது வினாடிகளால் நிரப்பிட உன்னால் முடியுமானால் ...
- இந்தப் பூமியும் அதிலுள்ள அத்தனையும் நிச்சயமாய் உனக்குரியவைதான் மகனே! அன்றியும் நீ ஓர் உண்மை மனிதனா வாய் மகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எங்கள்
# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்....

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு"



எமது குடும்பத் தலைவர் **பழனி துரைரத்தினம் அவர்கள்** பிரிவுற்றார் என அறிந்து உடன்வந்து அனுதாபம் தெரிவித்து பூவுடலுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை நெறிப் படுத்தியும் மேலும் பல வழிகளில் உதவியும் அமரரின் இறுதிக் கிரியைகள் நிறைவுறும் வரை பங்கு பற்றியும் உதவிய அன்பர்களுக்கும், தொலைத்தொடர்பு, தொலைநகல் வழியாக அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் அளித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம் சமர்ப்பித்து ஆறுதல் தெரிவித்தவர் களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் இன்று நடைபெறும் அமரரின் ஆன்ம ஈடேற்ற வழிபாடுகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நன்றி**


**பழம்பிள்ளையார் கோவில் வீதி,**
**கே.கே.எஸ், றோட்,**
**மல்லாகம்.**

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org